YOUR WILL

CONDEMNED
1

சிலுவைப் பாதை

INRI
CRUCIFIED
12

MOTHER'S GRIEF
4

HE'S ALIVE

YOUR WILL BE DONE!

சிலுவைப்பாதை

தொடக்க செபம்:

விண்ணகத் தந்தாய், கல்வாரியை நோக்கி பயணம் செய்த உம் திருமகனுடன் நான் இப்பயணத்தைத் தொடங்குகிறேன். என் மீது உமக்குள்ள அன்பையும் அக்கறையையும் நான் காணச் செய்வீராக. என் மீது உமக்குள்ள அன்பின் அத்தாட்சி இயேசுவின் சாவே. உமது திருச் சித்தத்தை நிறைவேற்ற இயேசு எத்தனை சங்கடப் பட்டார் என்று நான் காணச் செய்வீராக. எனக்காக உயிர்விட இயேசுவைத் தூண்டிய அன்பில் எனக்கும் ஒரு சிறிது தருவீராக. உம் திரு மகனை வாழ்வில் வழி நடத்தி உத்தானத்தின் மகிமைக்கு அழைத்துச் சென்றது போல உம் மகனின் அடிச்சுவடுகளில் நடக்கும் என்னையும் நடத்துவீராக.

சுருக்கமான உத்தம மனஸ்தாப ஜெபம்:

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும் , நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன்.உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக, இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுiவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பழிகளைப் சுமத்திப் பரிகசித்தார் - உயிர்
பறித்திட எண்ணித் தீர்பளித்தார்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

முதல் ஸ்தலம்: இயேசு நாதரைச் சாவுக்குத் தீர்வையிடுகிறார்கள்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இயேசு இரட்சகரே! நீர் குற்றமற்றவராக இருந்த போதிலும் சிலுவை மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டீர். மற்றவர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு ஏளனம் செய்யும் போதும் குற்றவாளியாகத் தீர்ப்பிடும்போதும் உம்மைப்போல் அனைத்தையும் அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்காகச் செபிக்கும் மனநிலையை எனக்குத்தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

தாளாச் சிலுவையைச் சுமக்க வைத்தார் -உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

இரண்டாம் ஸ்தலம்: இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

என்னைப்பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையை சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும் என்று கூறிய இயேசுவே! என்னுடைய துன்பங்களும், துயரங்களுமாகிய சிலுவையை சுமந்துகொண்டு உம்முடைய இரத்தம் பதிந்த பாதச் சுவடுகளை நானும் தொடருகிறேன். எனக்கு வரும் வேதனைகள், சோதனைகளையெல்லாம் குறை கூறாமல் அன்பௌடன் ஏற்று வாழும் மனநிலையை எனக்குத் தாரும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

விழுந்தீர் சிலுவைப் பளுவோடு - மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

மூன்றாம் ஸ்தலம்: இயேசு சிலுவையின் பாரத்தால் முதல் முறை கீழே விழுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

கற்கள் நிறைந்த வழியில் தளர்ந்த உடலோடும், தள்ளாடும் கால்களுடனும் சிலுவையின் பாரத்தால் முகம் குப்புற நிலத்தில் விழுந்த இயேசுவே! உம்மை நன்றியோடு துதித்து ஆராதிக்கின்றேன். என்னுடைய வாழ்க்கையில் வரும் அன்றாட துன்பங்களை எதிர்கொள்ள உமது அருளைப் பொழிந்தருளும். என் சிலுவையைச் சுமக்க சக்தியில்லாமல் தளரும்போது சோர்ந்து போகாமல் துணிவுடன் எழுந்து நடக்கத் துணை புரிந்தருளும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

தாங்கிட வொண்ணாத் துயருற்றே - உம்மைத்
தாங்கிய அன்னைத் துயருற்றாள்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

நாலாம் ஸ்தலம்: இயேசு தம் அன்னையை சந்திக்கிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

தாயின் நொறுங்கி வெடிக்கும் உள்ளத்தைக் கண்டு மிகுந்த வேதனையுற்ற இயேசுவே! உம்மை என் வாழ்வின் அனைத்துமாக ஏற்றுக்கொண்டு அன்பு செய்கின்றேன். நான் துன்புறும் நிமிடங்களில் உம் தாயின் தியாக நிலை எனக்கு ஆறுதல் அளிக்கட்டும். தேவ அன்னையின் வேதனைக்குக் காரணம் எங்களுடைய பாவங்கள்தான் என்பதை நாங்கள் உணருகிறோம். அவற்றிற்கெல்லாம் பரிகாரம் செய்ய எங்களுக்கு அருள் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்
வருத்தினார் தன்னை உம்மோடு
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

ஐந்தாம் ஸ்தலம்: இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

கருனைக் கடலாகிய இயேசுவே! இந்த நிலையில் நான் உம்மைக் கண்டிருந்தால் உமக்கு உதவி செய்ய நான் முன் வந்திருப்பேன். ஆனால்" சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம்
எனக்கே செய்தீர்கள்" என்றுரைத்த இயேசுவே! என்னைச் சுற்றிலுமுள்ளவர்களில் உம்மைக் கண்டுகொண்டு அவர்களுக்கு உதவி செய்ய எனக்கு அருள் புரியும். அப்போது நானும் சீமோனைப்போல் ஆசீர்வதிக்கப்படுவேன். அவ்வன்பு பணியை நானும் பிறருக்குத் தொடர்ந்து செய்து நிறைவடைவேன். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

நிலையாய்ப் பதிந்தது உம் வதனம் - அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

ஆறாம் ஸ்தலம்: இயேசுவின் முகத்தை ஒரு பெண் துடைக்கிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

" எனக்கு இரக்கம் காட்ட யாரேனும் உண்டோ எனப் பார்த்தேன்", என்று இறைவாக்கினர் வழியாகக் குறிப்பிடப்பட்ட இயேசுவே! வெரோணிக்காளைப்போல் நானும் உமக்கு உதவி செய்ய ஆசைப்படுகிறேன். அடுத்திருப்போர் மற்றும் ஏழை எளிய மக்களின் தேவைகளில் முடிந்த அளவு அவர்களுக்கு உதவி செய்ய எனக்கு அருள் புரிந்தருளும். உம்முடைய பாடுகளின் மறையாத முத்திரையை என் இதயத்தில் பதியச் செய்தருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால் - அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

ஏழாம் ஸ்தலம்: இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

சிலுவைப்பயணத்தின் போது சுற்றிலும் உள்ளவர்களால் ஏளனம் செய்யப்பட்ட இயேசுவே! " தந்தை எனக்குக் கொடுத்த துன்பக்கிண்ணத்தில் நான் குடிக்காதிருப்பேனா? தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே இவ்வுலகிற்கு
வந்தேன்" என்றுரைத்த இயேசுவே! நீர் இல்லாமல் எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. நாங்கள் எதிர்கொள்ளும் சோதனைகளால் தளர்ந்து விழுந்து, எழுந்து நிற்க முடியாமல் தடுமாறும் போது உம்முடைய திருக்கரத்தை நீட்டி எங்களுக்கு உதவி புரிந்தருளும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு
மொழி நீர் நல்கி வழி தொடர்ந்தீர்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

எட்டாம் ஸ்தலம்: இயேசு யூதப் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

" உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றுரைத்த இயேசுவே! உமது சொல்லொண்ணா உடல் வேதனையையும், மன வேதனையையும் மறந்து எருசலேம் மகளிருக்கு ஆறுதல் அளித்தீரே. எளியவர்களின் அடைக்கலமாகிய இயேசுவே! எங்கள் துன்ப நேரங்களில் எங்களுக்கு ஆறுதலாக நின்று திடனளித்து எங்களுக்குத் துணை புரிந்தருளும். எங்கள் பாவங்களையும் எங்கள் மூதாதையரின் பாவங்களையும் மன்னித்தருளும். உம் திரு இரத்தத்தால் எம்மைக் கழுவிப் பரிசுத்தமாக்கியருளும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் - கால்
ஊன்றி நடந்திட மெய் நொந்தீர்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

ஒன்பதாம் ஸ்தலம்: இயேசு மூன்றாம் முறை விழுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

எதிரிகளின் கொடூரச் செயல்களால் பாடுகள் பட்டு, இரத்தமெல்லாம் சிந்தி உடல் தளர்ந்து கீழே விழுந்த இயேசுவே!" நீ துன்புறுத்தும் இயேசு நான் தான்" என்று , அன்று சவுலுக்கு அருளிய வார்த்தைகள் இன்று எனக்கும் உரித்தாகுகிறது. கருணை நிறைந்த இயேசுவே! உம்முடைய பாடுகளை நினைக்கும்போது என்னுடைய வேதனைகள் சாதாரணமானவை. வாழ்க்கைப்பாதையில் நான் சோர்வடையாமல் உம்மை நினைத்து அனைத்தயும் அன்புடன் தாங்கிக்கொண்டு பிறரை மனம் நோகச் செய்யாமலும் துன்புறுத்தாமலும் வாழ எனக்கு வரமருளும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

உடைகள் களைந்திட உமை தந்தீர் - ரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

பத்தாம் ஸ்தலம்: இயேசுவின் உடைகளைக் கழற்றுகிறார்கள்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

" என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள், என் உடை மீது சீட்டுப்போட்டார்கள்" என்று மறை நூல் வாக்கு நிறைவேறியது. இரத்தத்தால் ஒட்டியிருந்த ஆடைகள் உரித்தெடுக்கப்பட்ட போது மிக அதிக வேதனைப்பட்ட இயேசுவே! பாவம் நிறைந்த பழைய மனிதனை உரித்தெடுத்து உம்மையே அடைவதற்கும் உம்மைப் போல் வாழ்வதற்கும் அருள் புரிந்தருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

பொங்கிய உதிரம் வடிந்திடவே - உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

பதினொன்றாம் ஸ்தலம்: இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

எங்கள் உலக இரட்சகரே, அன்பின் புதிய தூதுவராய் வந்த உம்மையே உலகம் சிலுவையில் அறைந்தது. உலகத்தைச் சார்ந்தவரல்லாததால் உலகம் உம்மை எதிர்த்தது. எஜமானரை விட வேலைக்காரன் பெரியவன் இல்லை என்று மொழிந்தீரே. பிறரால் நாங்கள் துன்புறுத்தப்படும் போது உம்மைப்போல் அமைதியுடன் ஏற்றுக்கொண்டு அவர்களை மன்னித்து அவர்களுக்காக செபிக்க எமக்கு வரமருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

இன்னுயிர் அகன்றது உமைவிட்டு - பூமி
இருளினில் ஆழ்ந்தது ஒளி கெட்டு
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

பனிரெண்டாம் ஸ்தலம்: இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

தெய்வீக இரட்சகரே! நீர் உயிர் விட்ட போது சூரியன் இருண்டது. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. பூமி குலுங்கி பாறைகள் பிளந்து கல்லறைகள் திறக்கப்பட்டன. "நான் பெற வேண்டிய திருமுழுக்கு ஒன்று உண்டு. அது நிறைவேறுமளவும் நான் எவ்வளவோ ஏக்கமாயிருக்கிறேன்" என்ற இயேசுவே! உம்முடைய தகனப்பலி நிறைவேறியது. என் பலியும் ஒரு நாள் முடிவாகும். நானும் ஒரு நாள் இறப்பேன்.அன்று உம்மைப் போல், தந்தையே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று கூறி உயிர் விட எனக்கு அருள் புரிந்தருளும். ஆமென்.

1 பரலோக மந்திரம், 1 அருள் நிறை, 1 திருத்துவ செபம் சொல்வோம்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

துயருற்றுத் துடித்தார் உளம் நொந்து - அன்னை
உயிரற்ற உடலினை மடி சுமந்து
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

பதின்மூன்றாம் ஸ்தலம்: இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்குகிறார்கள்.
முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

மிகுந்த வியாகுலமடைந்த மாதாவே! உம்முடைய அருமை மகன் உமது மடியிலிருந்து மௌனமான மொழியில் "நான் செல்கிறேன்" என்று கூறிய போது நீர் அடைந்த வேதனை யாரால் அளவிட முடியும்? பாலன் இயேசுவைக் கையில் ஏந்தியதிலிருந்து கல்வாரி மரணம் வரை ஒவ்வொன்றும் உம் இதயத்தைக் குத்தித் திறந்தது. " உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" என்ற இறைவாக்கினர் சிமியோனின் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. இயேசுவின் பாடுகளின் போது நீர் அனுபவித்த வேதனைகளை நினைத்து அடுத்தவர் அநியாயமாகத் தீர்ப்பிடப்பட்டு வேதனைப் படும் போது அவர்களுக்கு ஆறுதலாக நின்று செயல்பட என்னைப் பக்குவப்படுத்தியருளும்.ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு - நீர்
அடங்கிய கல்லறை உமதன்று
எனக்காக இறைவா எனக்காகஇடர்பட வந்தீர் எனக்காக

பதிநான்காம் ஸ்தலம்: இயேசு கல்லறையில் வைக்கப்படுகிறார்.

முதல்வர் : திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
அனைவரும்: ஏனெனில் உமது பாரமான திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

" என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர். உம் புனிதர் அழிவுகாண விட மாட்டீர்" என்ற மறைநூல் வாக்கின்படி , அகோரப் படுகள்பட்டு , இறந்து மகிமையடைந்த இயேசு இரட்சகரே! உம்மோடு இறப்பவர்கள் உம்மோடு வாழ்வார்கள். இடுக்கமான கிறிஸ்தவ வாழ்வு வழியாக நாங்கள் உம்மோடு கூட அடக்கம் செய்யப்படுகிறோம் என்ற நிலையை உணர்ந்து பாவத்திலிருந்து விடுதலையடைந்தவர்களாய் பரிசுத்தமாக வாழ, எமக்கு அருள் புரிந்தருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

பொறுத்தருளும் கர்த்தாவே! உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும். என்றென்றைக்கும் எங்கள் பேரில் கோபமாயிராதேயும் சுவாமி தயவாயிரும் சுவாமி தயவாயிரும்(3 முறை)

இறுதி செபம்: விண்ணகத் தந்தையே! எங்களுக்காக அனைத்துத் துன்பங்களையும், மரணத்தையும் அன்புடன் ஏற்றுக்கொண்ட உமது திருமகனின் எண்ணற்ற காயங்களுடன் கூடிய திரு உடலையும், திரு இரத்தத்தையும், தி ரு ஆன்மாவையும் ஏற்றுக்கொண்டு எங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து எங்களோடு உமக்குள்ள உறவைப் புதுப்பித்தருளும். உம் திருக்குமாரன் எங்களுக்காகக் கல்வாரியில் சிந்திய திரு இரத்தம் எங்களுக்காக பரிந்து பேசுவதாக. எங்கள் பாவங்கள் பெரிது என்று நாங்கள் அறிகிறோம்.எனினும் உம்முடைய கருணை அதைவிடப் பெரிது அன்றோ? உம் அருளைப் பெற உமது அருமை மகன் இயேசுவின் பாடுகள் போதுமானது. உம்முடைய ஒரே மகனை எமக்களித்த தந்தையே உமக்கு மகிமையும், சிலுவை மரணத்தால் எங்களை இரட்சித்த இயேசுவுக்கு ஆராதனையும் இரட்சிப்பின் பலியை நிறைவடையச் செய்த தூய ஆவியானவருக்குத் துதியும் உரித்தாகுக. ஆமென்.

திருத்தந்தையின் கருத்துக்களுக்காக 1 பரலோக மந்திரம், 1 அருள் நிறை, 1 திருத்துவ செபம் சொல்வோம்.

சிலுவைப் பாதையின் இறுதியில் நம் திருத்தந்தையின்
கருத்துக்கள் நிறைவேறும்படி
கிறிஸ்து கற்பித்த செபம்,
மங்கள் வார்த்தை செபம்
திருத்துவப் புகழ் சொல்வோம்.
நம் பாவங்களுக்காக முழுமையாக மனம் வருந்துவோம்.
நற்கருணை விருந்தில் பங்கேற்போம்.
இவ்வாறு, இறையருள் துணையால்
நம் ஆன்ம நலனுக்காக
நாம் பரிபூரண பலன் பெறலாம்.
அதை இறந்தோருக்காகவும் ஒப்புக்கொடுக்கலாம்.

MOTHER'S GRIEF

http://www.supuwatha.com/iraivaarthai/siluvaippaathai